# நெல்லிக்குப்பம் நகராட்சி
## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2019–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13–ம் தேதி வெள்ளிக்கிழமை (13.09.2019 ) மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ் .பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.

**மன்றப்பொருள்.1.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ் கண்ட மேல்பாதி பகுதியில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி மற்றும் வாழப்பட்டு பகுதியில் 60000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டப்பட்டு சுமார் 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது . இதனால் மேற்படி தண்ணீர் தொட்டிகளில் தூண்கள் விரிசலடைந்து பழுதடைந்துள்ளது . எனவே இரண்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலும் பொது மக்களுக்கு முழு கொள்ளவு தண்ணீர் ஏற்றி விநியோகம் செய்ய இயலவில்லை . மேலும் வாழப்பட்டில் தற்போது 60000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி தண்ணீர் பற்றாக் குறையாக உள்ளதால் சீரான குடிநீர் விநியோகம் செய்ய ஒரு லட்சம் கொள்ளவு கொண்ட மேல் நிலை தண்ணீர் தொட்டி கட்டப்பட வேண்டியுள்ளது . எனவே கீழ் கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தெதகை ரூ. |
|---|---|---|
| 1 | வார்டு எண் . 28 மேல்பாதி பகுதியில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டுதல் பணி | 35.00 |
| 2 | வார்டு எண் . 15 வாழப்பட்டு பகுதியில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டுதல் பணி | 35.00 |

அலுவலகக்குறிப்பு .1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் விநியோக நிதியில் மேற் கொள்ளவும் அரசு நிதி வரப்பெற்றவுடன் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம் .

(ந.க.எண் . 2602/2019/E1)

**தீர்மான எண் : 193 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.2.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜம்புலிங்கம் பூங்காவில் உள்ள 10.00 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டப்பட்டு சுமார் 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது . இதனால் மேற்படி நீர்த் தேக்க தொட்டியின் தூண்கள் பழுதடைந்து பொது மக்களுக்கு முழு கொள்ளவு தண்ணீர் ஏற்றி விநியோகம் செய்ய இயலவில்லை . மேலும் மேற்படி நீர்த் தேக்க தொட்டியை பார்வையிட்ட நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர் அவர்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் பொது மக்கள் குடிநீர் விநியோகம் பாதிப்படையாமல் இருக்க உடனடியாக 5 இலட்சம் கொள்ளவு கொண்ட புதிய மேல் நிலை நீர்த் தேக்கத் தண்ணீர் தொட்டி அமைக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்கள் . எனவே அப்பகுதி மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய ஜம்புலிங்கம் பூங்கா பகுதியில் புதியதாக 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட புதிய மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தெதகை ரூ. |
|---|---|---|
| 1 | ஜம்புலிங்கம் பூங்காவில் 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டுதல் பணி | 50.00 |

அலுவலகக்குறிப்பு .1.மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் நிதியில் மேற் கொள்ளவும் அரசு நிதி வரப்பெற்றவுடன் ஈடு செய்து கொள்ளவும் மன்றம்

அங்கீகரிக்கலாம் .

ந.க.எண் . 2601/2019/E1)

<u>தீர்மான எண் : 194 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>

<u>மன்றப்பொருள்.3.</u> நெல்லிக்குப்பம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண் . 151 நாள் . 31.07.2019 படி 06.09.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட குடிநீர் பகீர்மான குழாய்களில் ஏற்படும் அடைப்பு மற்றும் உடைப்பு சரி செய்தல்,சிறு மின் விசை மின் மோட்டார்களில் ஏற்படும் பழதுகளை சரி செய்தல், மோட்டார் ஸ்டாட்டர்களில் ஏற்படும் பழதுகளை சரி செய்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் | 9.00 | 1. M/s. அருணாச்சல அசோசியேட்ஸ் | **0.21 %** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | 2. திரு. K.N.முருகன் | **3.20 %** மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : –</u> வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.21 %** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. அருணாச்சல அசோசியேட்ஸ் , ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(ந.க.எண் . 2352/2019/இ1)

<u>தீர்மான எண் : 195 அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது .</u>

<u>மன்றப்பொருள்.4.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஜம்புலிங்கம் பூங்கா மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி , மேல்பாதி மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி மற்றும் வாழப்பட்டு மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி ஆகிய 3 மேல் நிலை தண்ணீர் தொட்டிகளும் கட்டப்பட்டு சுமார் 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது . தற்சமயம் மேற்படி நீர்த் தேக்க தொட்டியின் தூண்கள் பழுதடைந்தும் , தண்ணீர் தொட்டியின் இணைப்பு காலங்களில் விரிசல் ஏற்பட்டும் உள்ளது . இதனால் தண்ணீர் தொட்டிகளில் முழு அளவு தண்ணீர் ஏற்றி விநியோகம் செய்ய இயலாமல் உள்ளது . எனவே 3 மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் பதில் புதிய மேல்நிலை தண்ணீர் தொட்டி கட்ட வேண்டியுள்ளது . தற்சமயம் நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் சிறப்பு நிதி பெற்று பணியை செய்து முடிக்கலாம் . இருப்பினும் 3 மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் கட்ட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ . 135.00 லட்சத்தை அவசர அவசியம் கருதி குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு .1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் விநியோக நிதியில் மேற் கொள்ளவும் அரசு நிறப்பு நிதி வரப்பெற்றவுடன் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம் .

(ந.க.எண் . 2601/2019/E1)

<u>தீர்மான எண் : 196 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>

<u>மன்றப்பொருள்.5.</u> தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர், இயக்குநர் அவர்களின் ந.க.எண்.448/2019/அ3, நாள்.08.08.2019 கடிதத்தில் இந்நகராட்சியில் பணிபுரியும் வருவாய் உதவியாளர்கள் திரு.எம்.**கருணாகரன்**, திருமதி.ஆர்.**ரெதினா**, செல்வி.எம். **இசபெல்லா**, ஆகியோர்களுக்கு

விரிவாக்கப் பயிற்சி வகுப்பு (Comprehensive Training course) Batch-I **26.08.2019** முதல் **20.09.2019** வரை நடைபெற உள்ளதால் அப்பபயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளும் ஒரு நபருக்கு ஒரு நாள் கட்டணம் (உணவு தங்குதல் உள்பட) ரூ.1000 வீதம் 20 நாட்களுக்கு ரூ.20,000/– கட்டணம் நிர்ணயித்து உள்ளார்கள். பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளும் மூன்று நபர்களுக்கு ரூ.20000 x 3 = ரூ.60000/– வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1). அனுமதிக்கலாம்.

2).அவசரம் அவசியம் கருதி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு தொகை அனுப்பியதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.2536/2019/சி1

**தீர்மான எண் : 197 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.6.** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சட்டமன்ற உரை நாள் **18.07.2019** அன்று அறிவுறுத்தியுள்ளதற்கினங்க, நகர்பகுதிகளில் உள்ள அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு முகாம் ஆகஸ்ட் **27** ம் தேதி முதல் ஆகஸ்ட் **31** ம் தேதிக்குள் நடத்தவும், அதற்காக உரிய விளம்பரம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி நெல்லிக்குப்பம் நகர் பகுதியில் **27.08.2019** முதல் **31.08.2019** வரை முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு முகாம் நடத்திடவும், நகரில் உள்ள அனைத்து பொது மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் இந்நகர் பகுதிகளில் ஆட்டோ ஒலிப்பெருக்கி முலம் விளம்பரம் செய்திடவும் மற்றும் முக்கிய பகுதிகளில் விளம்பர பேனர்கள் அமைத்திடவும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும் , அதற்கான உத்தேச செலவினத் தொகை பணிமேற்பார்வையாளர் அவர்களின் குறிப்பின்படி ரூ.35000/– ஆகும் என்பதையும், செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு .** பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 1961/ஹெச்1/19.

**தீர்மான எண் : 198 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.7.** நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சிறப்பு முகாம் குறித்த நகர் பகுதிகளில் உள்ள **30** வார்டுகளிலும் பொதுமக்கள் அறியும் வண்ணம் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்திடவும் மற்றும் விளம்பர பேனர்கள் வைத்திடவும் **23.08.2019** அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | விலைப்புள்ளிதாரார் பெயர்/ முகவரி | விலைப்புள்ளி ரூ. ஒரு எண்ணத்திற்கு | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆட்டோ விளம்பரம் | பேனர் பெரியது | பேனர் சிறியது | விளம்பரஏ நாட்டீஸ் |
| 1 | திருமதி. எஸ்.புவனேஸ்வரி<br>ஒப்பந்தக்காரார்<br>நெல்லிக்குப்பம் | ரூ.2750 | ரூ.600/– | ரூ.450/– | ரூ.1800/– |
| 2 | திருமதி. பரிமளா<br>ஒப்பந்தக்காரார்<br>நெல்லிக்குப்பம் | ரூ.2950 | ரூ.800/– | ரூ.550/– | ரூ.2000/– |
| 3 | திரு,சந்திரசேகர்<br>ஒப்பந்தக்காரார்<br>நெல்லிக்குப்பம் | ரூ.3000 | ரூ.600/– | ரூ.550/– | ரூ.2250/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் கண்ட திருமதி எஸ்.புவனேஸ்வரி ஒப்பந்தக்காரர் நெல்லிக்குப்பம் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் , மேற்படி ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கலாம் . மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு .</u> மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண் 1962/ஹெச்1/19**

**<u>தீர்மான எண் : 199 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**மன்றப்பொருள்.8.** இந்நகராட்சிக்கு எதிராக திருமதி .க . சந்திரா , துப்புரவு பணியாளர் (ஓய்வு) பழைய ஓய்வூதியம் வழங்க கோரி சென்னை உயர் நீதி மன்றத்தில் W,P ,No . 24978/2019 ஆக வழக்கு தொடர்ந்துள்ளார் . இவ்வழக்கில் எதிர்த்து நகராட்சி சார்பாக Affidavit நீதி மன்றத்தில் தாக்கல் செய்யவும் இவ்வழக்கு தொடர்பாக இந்நகராட்சி சார்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்காடுவதற்கு நியமனம் செய்யலாம் . வக்காலத்து நமூனா நீதி மன்றத்தில் தாக்கல் செய்ய அதற்கான செலவினம் ரூ . 15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம் ) அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு . வி. ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களுக்கு காசோலையாக அனுப்பி வைக்க இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1). அனுமதிக்கலாம்.

2).வழக்கின் அவசரம் அவசியம் கருதி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று அரசு சிறப்பு வழக்கறிஞருக்கு காசோலை அனுப்பி வைத்ததை மன்றம் ஏற்கலாம்.

**<u>ந.க.எண் . 2404/2013/சி1</u>**

**<u>தீர்மான எண் : 200 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்.9.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 6எ, பிளாக் 27, TS No/ 43 பழைய சர்வே எண். 138, இடத்தின் பரப்பு 8160 சதுர மீட்டர் ஆகும். இடத்தின் உரிமையாளர் திரு.டி.மோகன் ராஜ் த/பெ. தங்கராஜ் அவர்கள் நிலப்பயன் மாற்றம் கோரி விண்ணப்பித்துள்ளார். மேற்படி இடம் திட்டமில்லா பகுதியில் அமைகிறது. அங்கீகரித்த முழுமைத் திட்டத்தில் விவசாயப் நிலப்பகுதியில் அமைகிறது. மனுதார் மேற்படி இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு போட உள்ளார். மனுதாரர் கோரும் கோரிக்கை ஏற்று நிலப் பயன்பாடு மாற்ற மன்றத் தீர்மானம் 142 நாள். 28.06.2019ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் தமிழ் நாளிதழில் 30.06.2019, ஆங்கில நாளிதழ் 29.06.2019ல் ஆட்சேபனை, ஆலோசனை கோரியும் நாளிதழ் வெளியிட்டும் ஒருவரும் ஆட்சேபனைக் இதுவரை தெரிவிக்கவில்லை. எனவே, மனுதார் விண்ணப்பத்தினை உள்ளூர் திட்டக் குழுமத்தில் பொருள் வைத்து, தீர்மானம் நிறைவேற்றி உதவி இயக்குநர் மூலம் அரசுக்கு அனுப்பி வைக்கலாம்.

**அலுவலககுறிப்பு :-**

மனுதாரர் நிலப்பயன் மாற்றம் கோரும் மனுவின் மீது, தமிழ், ஆங்கில நாளிதழ் விளம்பரம் செய்து ஆட்சேபனை கோரப்பட்டது எந்த வித ஆட்சேபனையும் இதுவரை வரவில்லை. எனவே மனுதாரர் விண்ணப்பத்தினை ஏற்று அரசுக்கு குடியிருப்பாக நிலப்பயன் மாற்றம் செய்யலாம்.

மேலும் விளம்பரங்களுக்கு ஏற்பட்ட செலவினத்தை பொது நிதியில் விடுவிக்க உள்ளூர் திட்டக் குழுமம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1671/2019/எப்1)**

**<u>தீர்மான எண் : 201 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றப்பொருள்.10.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர்.அம்பேத்கார் பேருந்து நிலைய கடைகளுக்கு கடை எண்.2,6,10,11 மற்றும் 13 கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 13.09.2019 அன்று கோரப்பட்டதில், கடை எண்.10க்கு மட்டும் கீழ்கண்ட நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி எழுப்பியதை மன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பொது ஏலம் கோரியவரின் பெயர் மற்றும் முகவரி | உயர்த்தப்பட்ட மறு ஏல பொது ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1 | திரு.கே.பாஸ்கரன்<br>83, கைலாசநாதர் கோயில் தெரு,<br>நெல்லிக்குப்பம்.<br>போன் நெம்பர்– 9842320502. | ரூ.1,450/– |
| 2 | திரு.இ.தர்மலிங்கம்,<br>64, அண்ணா நகர்,<br>நெல்லிக்குப்பம்.<br>போன் நெம்பர் – 9677451929. | ரூ.1,425/– |

அலுவலக குறிப்பு : வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள ஏலதாரர் கடை எண். 10க்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்ட தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.468/2006/அ1.

தீர்மான எண் : 202 அலுவலக குறிப்பினை ஏற்று உயர்ந்த ஏலத்தினை ஏற்க அனுமதிக்கப்பட்டது .

மன்றபொருள்.11. நெல்லிக்குப்பம் நகராட்சி பொது நிதியின் கீழ் அவசர அவசியம் கருதி நகராட்சிக்கு சொந்தமான அலுவலக ஈப்பு வாகனம் TN-31/AE 5944 ல் பேட்டரி பழுதடைந்து விட்டதால் அதனை புதியதாக மாற்றி பொருத்தும் பணிக்கு 09.09.2019ல் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல்

| விலைப்புள்ளி திருவாளர்கள் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|
| திரு . R. பிரகாஷ் ,<br>பிரகாஷ் பேட்டரி சேல்ஸ் & சர்வீஸ் ,<br>90/2 , மெயின் ரோடு<br>நெல்லிக்குப்பம் | 7400/– |
| SF Sonic பேட்டரிஷ்<br>11/A . நெல்லிக்குப்பம் மெயின் ரோடு<br>கடலூர் | 7700/– |

அலுவலகக்குறிப்பு : -1. வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு . R. பிரகாஷ் ,பிரகாஷ் பேட்டரி சேல்ஸ் & சர்வீஸ் , 90/2 , மெயின் ரோடு நெல்லிக்குப்பம் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. ஈப்பு அலுவலக அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு மற்றும் தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்லாம் .

(ந.க.எண் . 2360/2019/இ1) .

தீர்மான எண் : 203 அலுவலக குறிப்பினை ஏற்று உயர்ந்த ஏலத்தினை ஏற்க அனுமதிக்கப்பட்டது .

மன்றப்பொருள்.12. நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஸ்ரீபாலாஜி நகரில் நகராட்சிக்கு சொந்தமான பூங்கா உள்ளது . மேற்படி பூங்காவை தனி நபர் எவரும் ஆக்கிரமிப்பு செய்யாத வகையில் அப்பகுதியில் கம்பி வேலி அமைத்து மேற்படி இடத்தை பாதுகாத்திட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.80000/–ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் . 2609/2019/E1) .

தீர்மான எண் : 204 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .

மன்றப்பொருள்.13. நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான வார்டு எண் . 16ல் ஜீவா நகரில் நகராட்சிக்கு சொந்தமான இடம் உள்ளது . மேற்படி இடத்தை தனி நபர் எவரும் ஆக்கிரமிப்பு செய்யாத வகையில் அப்பகுதியில் கம்பி வேலி அமைத்து மேற்படி இடத்தை பாதுகாத்திட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.90000/–ஐ

பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் .2607/2019/E1) .
<u>தீர்மான எண் : 205 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>

<u>**மன்றப்பொருள்.14.**</u> நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான வார்டு எண் . 8ல் முஸ்லிம் மேட்டுத் தெருவில் நகராட்சிக்கு சொந்தமான இடம் உள்ளது . மேற்படி இடத்தை தனி நபர் எவரும் ஆக்கிரமிப்பு செய்யாத வகையில் அப்பகுதியில் கம்பி வேலி அமைத்து மேற்படி இடத்தை பாதுகாத்திட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.90000/–ஐ பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் .2605/2019/E1)
<u>தீர்மான எண் : 206 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>

<u>**மன்றப்பொருள்.15.**</u> நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான வார்டு எண் . 16ல் சாவடியில் நகராட்சிக்கு சொந்தமான பழைய கால் நடை மருத்துவமனை பழுதடைந்துள்ளது . மேற்படி இடத்தை தனி நபர் எவரும் ஆக்கிரமிப்பு செய்யாத வகையில் அப்பகுதியில் கம்பி வேலி அமைத்து மேற்படி இடத்தை பாதுகாத்திட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ .60000/–ஐ பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் .2613/2019/E1)
<u>தீர்மான எண் : 207 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>

<u>**மன்றப்பொருள்.16.**</u> நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் . 5ல் அண்ணா நகரில் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் ஆகும் பழுதடைந்த தண்ணிர் தொட்டி அப்பகுதியில் உள்ள வீடுகளின் மேல் இடிந்து விழும் நிலையில் உள்ளது . தற்சமயம் பழுதடைந்த தண்ணீர் தொட்டியை பொது மக்கள் நலன் கருதியும் எந்த வித அசம்பாவிதமும் ஏற்படாமல் இருப்பதற்கு மேற்படி தண்ணீர் தொட்டியை இடித்து அப்புறபடுத்துவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ . 20000/– அவசர அவசியம் கருதி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு .1. மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் .2851/2019/E1)
<u>தீர்மான எண் : 208 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>

<u>**மன்றப்பொருள்.17.**</u>நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள மெயின் ரோடு ஸ்கூல் தெருவில் உள்ள நகராட்சி வணிக வளாகம் 2 பகுதியில் உள்ள கடைகளின் மேல் பகுதியில் வெதரிங் கோர்ஸ் மற்றும் டைல்ஸ்கள் பழுதடைந்து மழைக்காலங்களில் தண்ணீர் மாடி பகுதியில் தேங்கி கடைகளுக்குள் கசிவு ஏற்பட்டு கட்டிடம் பழுதடையும் நிலையில் உள்ளது . மேலும் கடை வாடகைதாரர்கள் கடை நடத்த இயலாமல் உள்ளனர் . எனவே கட்டிடத்தின் மேல் பகுதியில் பழுதடைந்துள்ள சுண்ணாம்பு ஜல்லி கான்கிரிட்டுகளை அப்புறப்படுத்திவிட்டு புதியதாக கான்கிரிட் போட்டு புதிய டைல்ஸ் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ . 290000/–ஐ பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் .2850/2019/E1)
<u>தீர்மான எண் : 209 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>

<u>**மன்றப்பொருள்.18**</u> நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான CCTV கேமரா பழுது அடைந்ததை பழுது நீக்கவும் மற்றும் புதியதாக இரண்டு இடங்களில் கேமரா பொருத்தும் பணிக்கு மன்ற தீர்மான எண் . 150 நாள் 31.07.2019 ன் படி நகராட்சி வருவாய் நிதியின் கீழ் 11.09.2019ல் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல்

| ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|
| திரு . முகம்மது தாஜிதின் , நெல்லிக்குப்பம் | 17908/– |
| திரு . ரஹமான் , நெல்லிக்குப்பம் | 20300/– |
| A.R.G .Solution , கடலூர் மெயின் ரோடு , நெல்லிக்கப்பம் . | 20650/– |

அலுவலகக்குறிப்பு : – வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.17908/–குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு . முகம்மது தாஜிதின் , நெல்லிக்குப்பம் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

(ந.க.எண் . 2321/2019/இ1)

**தீர்மான எண் : 210 அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள்.19.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான ஜம்புலிங்கம் பூங்கா மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி , மேல்பாதி மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி மற்றும் வாழப்பட்டு மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி ஆகிய 3 மேல் நிலை தண்ணீர் தொட்டிகளும் கட்டப்பட்டு சுமார் 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது . தற்சமயம் மேற்படி மேல் நிலை நீர்த் தேக்க தொட்டிகள் உபயோகபடுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது . இதனால் குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் கீழ் கண்ட இடங்களில் புதியதாக மேல் நிலை நீர்த் தேக்க தொட்டிகள் கட்டபட வேண்டியுள்ளது .

1. ஜம்புலிங்கம் பூங்கா மேல் நிலை தண்ணீர் தொட்டி 5.00 லட்சம் விட்டர் கொள்ளவு .
2. மேல்பாதி மேல் நிலை தண்ணீர் தொட்டி 1.00 லட்சம் விட்டர் கொள்ளவு .
3. வாழப்பட்டு மேல் நிலை தண்ணீர் தொட்டி 1.00 லட்சம் விட்டர் கொள்ளவு .

மேற்படி மேல் நிலை நீர்த் தேக்க தொட்டிகள் புதியதாக கட்டுவதற்கு பாண்டிச்சேரி பொறியியல் கல்லூாி மூலம் மண் பாிசோதனை செய்ய வேண்டியுள்ளது . மண் பாிசோதனை செய்ய உத்தேச செலவினம் ரூ. 150000/– ஆகும் . இதனை அவசர அவசியம் கருதி குடிநீர் விநியோக நிதியில் மேற் கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் . 2862/2019/E1)

**தீர்மான எண் : 211 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள் .20.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாடு திட்டம் (TURIP) 2019–2020 – ன் கீழ் அரசு மானியம் பெற்று மழை வெள்ளத்தால் சேதமடைந்துள்ள சாலைகளை ரூபாய் 400.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க 2019–20ம் ஆண்டின் தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்ட அனுமதி குழு நாள் . 18.07.2019ன் படி கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கியுள்ளது .

(ரூ.கோடியில்)

| மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு/ மானிய நிதி/நில அபிவிருத்திக் கட்டணம் | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|
| 4.00 | 0.40 | 3.00 | 0.60 |

மேற்படி பணிக்கு . சென்னை , நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண் . 17349/2019/இ3 நாள் . 03.09.2019 ன் படி நிர்வாக அனுமதி பெற வேண்டியுள்ளதால் கீழ் கண்ட படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடிற்கும் , ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண் | சிப்பம் எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1 | மாருதி நகர் மெயின் ரோடு , வார்டு எண் . 25 காமராஜ் நகர் மெயின் ரோடு, வார்டு எண் .7 காமராஜ் நகர் , வான்பாக்கம் மெயின் ரோடு முதல் சோழவல்லி சுடுகாட்டு சாலை வரை மற்றும் முள்ளிகிராம்பட்டு ரோட்டில் தார் சாலை அமைத்தல் பணி , (வார்டு எண். 3,7,12,24, மற்றும் 25 ) | 200.00 |
| 2 | 2 | மரைக்காயர் நகர் , ஜீவா நகர் மெயின் ரோடு , ஜீவா நகர் 3வது குறுக்கு தெரு , சோழவல்லி மெயின் ரோடு , பாரதியார் தெரு மற்றும் பத்மாவதி நகரில் தார் சாலை அமைத்தல் பணி . ( வார்டு எண். 4,16,18,25 மற்றும் 26 ) | 200.00 |

அலுவலககுறிப்பு:- . மன்றம் அனுமதிக்கலாம் .
(ந.க.எண் . 2422/2019/இ1)

**தீர்மான எண் : 212 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றப்பொருள் .21.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான வார்டு எண் . 16ல் சாவடியில் நகராட்சிக்கு சொந்தமான பழைய கால் நடை மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டு 45 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது . மேற்படி கட்டிடம் முழுவதும் பழுதடைந்து கீழே விழும் நிலையில் உள்ளது . தற்சமயம் கட்டிடம் பயன் படுத்த இயலாத நிலையில் உள்ளது . இதனால் நகராட்சிக்கு வருவாயும் கிடையாது . எனவே பழுதடைந்த கட்டிடத்தை இடித்து அப்புறபடுத்த தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.15000/–ஐ பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் . 2863/2019/E1)

**தீர்மான எண் : 213 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.